**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

****************

ஊடக அறிக்கை

# இந்திய வர்த்தக மற்றும் கைத்தொழில் சங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இலங்கையில் இந்திய நிறுவனங்களுக்கான வர்த்தக வாய்ப்புக்களின் தோற்றப்பாடுகள் மீதான காணொளி மாநாடு

நோய் பரவலுக்கு பின்னரான பொருளாதார சூழலில் இலங்கையில் இந்திய நிறுவனங்களுக்கான வாய்ப்புக்கள் மீதான காணொளி மாநாடொன்று (Video Conference) இந்திய வர்த்தக மற்றும் கைத்தொழில் சங்க சம்மேளனத்தின் (FICCI - The Federation of Indian Chambers of Commerce and Industry) ஏற்பாட்டில் இன்று இடம்பெற்றது.

இந்திய உயர் ஸ்தானிகராலய பொருளாதார மற்றும் வர்த்தக பிரிவின் தலைமை அதிகாரி திருமதி சுஜா கே மேனன் அவர்கள் இலங்கை -இந்திய பொருளாதார பங்குடைமை தொடர்பான முன்னுரை ஒன்றினை வழங்கியிருந்தார் . அத்துடன் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவானது தொடர்ச்சியான மாநாடுகள் மற்றும் சகல மட்டங்களிலுமான இறுக்கமானதும் சீரானதுமான உறவுகள் ஆகியவற்றினால் சுட்டிக்காட்டப்படுவதாகவும் அவர் அங்கு குறிப்பிட்டிருந்தார்.

உலகவங்கியின் கணிப் பீட்டுக்கு அமைவாக கடந்த வருடம் இலங்கை உயர் நடுத்தர வருமானத்தைப் பெறும் மட்டத்தினை எட்டியுள்ளதாக திருமதி மேனன் சுட்டிக்காட்டியிருந்தார். இலங்கையானது பாராட்டத்தக்க சமூக சுட்டிகளையும் கொண்டுள்ளதுடன் உலகளாவிய ரீதியில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கும் கொவிட்19, ஒன்றிணைந்த முயற்சிகளுக்கான அழைப்புக்களை

ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் குறிப்பிட் டிருந்தார். இலங்கையின் பொருளாதாரம், முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் மற்றும் தொழில்நுட்பம், உள்ளூர் வேலைவாய்ப்புகள் ஆகியவற்றுக்கு பல தசாப்தங்களாக இலங்கையில் இயங்கிவரும் இந்திய நிறுவனங்கள் முக்கிய பங்களிப்பினை வழங்கி வருகின்றன . அதேநேரம் பல்வேறு இலங்கை நிறுவனங்களும் இந்திய சந்தையில் கணிசமான பிரதிநிதித்துவத்தை கொண்டிருக்கின்றன. ஒன்றிணைவுக்கான புதிய வாய்ப்புக்களை நோக்கும் அதேநேரம் ஏற்கனவே உள்ள பங்குடைமை யை மேலும் வலுப்படுத்துமாறு ம் அவர் இந்திய நிறுவனங்களிடம் அழைப்பு விடுத்திருந்தார்.

FICCI பிரதிநிதிகள் மற்றும் பல இந்திய கம்பனிகள் இந்த காணொளிமாநாட்டில் கலந்துகொண்டிருந்தன.

*****

கொழும்பு

05 மே 2020